DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No:CC.No.40/2017**

**prosecution witness: PW-8**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மோகனகண்மணி | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>03.12.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்சமயம் இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மயக்கவியல் துறையில் முதுநிலை உறைவிட மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 01.12.2016 தேதியன்று இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது காலை 11.10 மணியளவில் 52 வயதுடைய ஆரோக்கியசாமி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக வந்த தபால் தங்கச்சிமடம் காவல்நிலைய தலைமைக் காவலர் எண்.886 திரு.ஜேம்ஸ் கிளிட்டஸ் என்பவர் மூலம் பெறப்பட்டது. அதே நாள் காலை 11.30 மணியளவில் பிரேத பரிசோதனை மேற்கொண்டபோது பிரேதமானது அழுகாத நிலையில் இருந்தது. பிரேத விறைப்புத்தன்மை முழுவதுமாக காணப்பட்டது. ஓர் சாதாரண ஊட்டச்சத்துள்ள ஆண் பிரேதமானது கை மற்றும் கால்கள் பக்கவாட்டில் நீட்டப்பட்ட நிலையில் படுக்க வைக்கப்பட்டிருந்தது. கண்கள் மூடிய நிலையில் இருந்தன. வலது காதின் வழியே இரத்தக்கசிவு இருந்தது. இடது காது, மூக்கு மற்றும் வாயின் வழியே எவ்வித திரவக்கசிவு இல்லை. தாடைகள் மூடிய நிலையில் வெற்றாக இருந்தது. கைகள் மூடிய நிலையில் வெற்றாக இருந்தது. நாக்கு வாயின் உட்புறம் இருந்தது. வெளிப்புற காயங்கள் காயம் 1) நெற்றியின் நடுப்புறத்தில் பிராண்டல் மற்றும் பெரைட்டல் பகுதியில் சுமார் 10X 2.5 cm மற்றும் மூளையின் ஆழத்தில் ஓர் சிதைந்த காயம் இருந்தது. காயத்தை திறந்து பார்த்தபோது தலையின் வலது பிராண்டோ பெரைட்டல் எலும்பு

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2024.12.03 18:57:48 +0530

உடைந்திருந்தது. மூளையின் வலது பிரான்டோ பெரைட்டல் பகுதியில் சுமார் 7 X 5 cm அளவில் ஓர் வீக்கக் காயம் இருந்தது. காயம் எண்.2) தலையின் வலது பெரைட்டல் பகுதியில் 2 X 2 X 1 cm அளவில் ஓர் சிதைந்த காயம் இருந்தது. காயம் எண்.3) தலையின் வலது பிராண்டல் பகுதியில் 2 X 2 X 1 cm அளவில் ஓர் சிதைந்த காயம் இருந்தது. காயம் எண்.4) வலது தோள்பட்டையில் 5X3 cm அளவில் ஓர் சிராய்ப்பு காயம் இருந்தது. காயம் எண்.5) வலது முழங்கையில் 3 X 2 cm அளவில் ஓர் சிராய்ப்பு காயம் இருந்தது. காயம் எண்.6) வலது கையில் 3x2 cm அளவில் ஓர் சிராய்ப்பு காயம் இருந்தது. காயம் எண்.7) வலது காலில் டிபியா மற்றும் பிபுலா எலும்புகள் உடைந்த நிலையில் காணப்பட்டன. மார்பு கூடு திறக்கப்பட்டது. இருதயம் சிவந்திருந்தது. இருதயத்தின் வலது புற அறை இரத்தம் உறையாத நிலையில் இருந்தது. இருதயத்தின் இடது புற அறை இரத்தம் உறைந்த நிலையில் இருந்தது. நுரையீரல்கள் சிவந்திருந்தன. அதில் குறுக்கு வாட்டில் வெட்டி பார்த்தபோது திரவக்கசிவு இருந்தது. நாவடி எலும்பு உடையாத நிலையில் இருந்தது. குரல்வளை உடையாத நிலையில் இருந்தது. மார்புக்கூடு எலும்புகள் உடையாத நிலையில் இருந்தன. வயிறு திறக்கப்பட்டது. இரைப்பையில் பாதியளவு செரிமானமான உணவுப் பொருள் இருந்தது. கல்லீரல், மண்ணீரல், கணையம் மற்றும் சிறுநீரங்கள் சிவந்திருந்தன. குடல் முழுவதுமாக காணப்பட்டது. குடல் சவ்வுகள் கிழியாத நிலையில் இருந்தன. சிறுநீரகப்பை வெற்றாக இருந்தது. இடும்பு எலும்புகள் உடையாத நிலையில் இருந்தன. மண்டை ஓடு திறக்கப்பட்டது. காயங்கள் காயம் எண்.1ல் உள்ளது போல் காணப்பட்டது. மூளை மற்றும் மூளை சவ்வுகள் சிவந்திருந்தன. தண்டுவடம் சிதையாத நிலையில் இருந்தது. தண்டுவட எலும்புகள் உடையாத நிலையில் இருந்தன. உடல் உள்ளுறுப்புகள் பாதுகாக்கப்படவில்லை. இறப்பிற்கான காரணம் இறந்தவர் பிரேத பரிசோதனைக்கு முன் 18 மணி நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள்ளாக முக்கிய உறுப்பான மூளையில் ஏற்பட்ட காயத்தாலும் மற்றும் பல காயங்களினால் ஏற்பட்ட உதிரப்போக்கு அதிர்சியாலும், வாகன விபத்தால் இறந்துள்ளார் என சான்றளித்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.4** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

பிரேத்தை பரிசோதிப்பதற்காக தபால் என்னிடம் காவலர் காலை 11.00 மணிக்கு ஒப்படைத்தார் என்றால் சரிதான். அதன்பின்பு தான் பிரேதத்தை நான் பரிசோதனை செய்தேன் என்றால் சரிதான். சுமார் 1 மணி நேரம் பிரேதத்தை பரிசோதனை செய்தேன். இறந்த நபர் ஏதாவது வாகனத்தில் அவர் கவனக்குறைவால் மோதி ஏற்பட்டிருக்கலாம் என்றால் ஏற்பட்டிருக்கலாம்.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.12.03 18:57:28 +0530